**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **SC.No. 2/2010**

Prosecution witness: **45**

| | | | |
|---|---|---|---|
| Name: | நெல்லையப்பன் | Caste: | |
| Father'sName: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

A2, A4, A6, A8, A11, A12, A15, A17,A20, A23 present. Others absent. Petition U/s 317 filed and allowed.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 25.04.2023**

**முதல் விசாரணை**:

நான் தென்காசியில் அரசூர் நங்கையம்மன் கோவில் தெருவில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். தென்காசி கூலக்கடை பஜாரில் மேல முத்தாரம்மன் கோவில் தெருவில் கதவு எண் 69ல் பாரத் என்ற பெயரில் ஜிம் நடத்தி வருகிறேன். தினம் காலையில் 06.00 மணியில் இருந்து 09.00 மணி வரையும், மாலையில் 05.00 மணியில் இருநது 09.00 மணி வரையும் நான் கடையில் இருப்பேன். மற்ற நேரமெல்லாம் கடை திறந்திருக்கும் ஆனால் நான் கடையில் இருக்க மாட்டேன். நான் கடைக்கு கூலக்கடை பஜார் வழியாக செல்வேன் . விடிஎஸ்ஆர் கடைவழியாக தான் செல்வேன். அந்த கடையில் யார் யார் உட்கார்ந்து பேசிக்கொள்வார்கள் அந்த கடை உரிமையாளர் யாருடன் பேசிக்கொண்டிருப்பார் என தெரியாது. எனக்கு காஜி முஸ்தபா கடை உரிமையாளர் கமால் என்பவரை தெரியாது. நான் எதையும் பார்க்கவில்லை. எனக்கு தமுமுக கட்சி இருப்பது தெரியும் அதில் யார் யார் உறுப்பினர் என்று தெரியாது. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது**:-

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார்கள் என்னை விசாரித்தார்கள் என்றும் அவர்கள் விசாரித்தபோது 14.08.2007 ம் தேதி வழக்கம்போல் நான் தினமும் இரவு 09.00 மணிக்கு கடையை அடைத்து விட்டு கூலக்கடை பஜாரிலிருக்கும் V.T.S.R கடை வழியாக தான் போவேன் என்றும் பத்து நாட்களாகவே தென்காசி நகர இந்து முன்னணி கட்சி தலைவர் குமார்பாண்டியனை கொலை செய்த வழக்கில் கைது செய்யப்பட்ட தென்காசி நகர த.மு.மு.க கட்சியைச் சேர்ந்த மவுண்ட்ரோடு ஹனிபா என்ற நாகூர்ஹனிபா, அவன் கூடவே சுத்தும் முருகேசன் என்ற அப்துல்லா ஆகிய இரண்டுபேர்களும் V.T.S.R கடையில் உட்கார்ந்து V.T.S.R கூடவும், ஹாஜிமுஸ்தபா கடை ஓனர் கமால் கூடவும் ஏதோ நோக்கமாக பேசிக்கொர்டிருப்பதை நான் அடிக்கடி பார்த்திருக்கிறேன் என்றும் பிறகு ஒரு வாரததிலேயே இந்த வெட்டு குத்துன்னு அசம்பாவிதம் நடந்ததுக்குக் காரணம் V.T.S.R -ம் , கமாலும் சேர்ந்து த.மு.மு.க கட்சி விடலைப் பசங்களை ஏவிவிட்டிருக்கார்னு புரிஞ்சது என்று சேரன்மாதேவி காவல் துணை கண்காணிப்பாளர் தன்னை விசாரித்ததாக போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மைக்கு மாறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தபோது மேற்சொன்ன சம்பவங்களை சொல்லிவிட்டு தற்போது நானும் எதிரியும் ஒரே ஊரைச்சேர்ந்தவர்கள் என்பதால் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**அனைத்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**